**ஜனவரி – 30**

# TNPSC துளிகள்

- 2024 ஆம் ஆண்டிற்குள் இந்திய ரயில்வே துறையானது 100% மின்மயமாக்கப்படும் என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார்.
    - இந்திய ரயில்வேயானது 2030ஆம் ஆண்டிற்குள் இந்திய ரயில்வே அமைப்பை சுழிய உமிழ்வு கொண்ட ஒரு அமைப்பாக மாற்றவும் திட்டமிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதலாவது நீருக்கடியிலான மெட்ரோ - கொல்கத்தா


- இந்தியாவின் முதலாவது நீருக்கடியிலான மெட்ரோவானது ஹூக்ளி நதிக்கரையில் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.
- இந்தத் திட்டமானது இந்திய ரயில்வேயிடமிருந்து 2.8 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியைப் பெறுவதற்காக காத்திருக்கின்றது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்த மெட்ரோ திட்டம் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ஹூக்ளி மெட்ரோவானது நாட்டில் உள்ள மிகப் பழமையான மெட்ரோக்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- இது 1984 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- புதிதாக கட்டமைக்கப்பட்டு வரும் இந்த மெட்ரோ ரயில் பாதையானது அந்நகரத்தின் 20% மக்களுக்குப் பயன்பட இருக்கின்றது. மேலும் இந்த மெட்ரோ ரயிலானது ஒரு நிமிடத்திற்குள் ஹூக்ளி ஆற்றைக் கடக்கும்.

## நிஷ்தா திட்டம்

- நிஷ்தா என்பது உலகில் இதே வகையைச் சேர்ந்த ஒரு மிகப்பெரிய ஆசிரியர்கள் பயிற்சித் திட்டமாகும்.
- நிஷ்தா - பள்ளித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கான தேசிய முன்முயற்சி (NISHTHA – National Initiative for School Heads and Teachers Holistic Advancement).
- இது தொடக்க மட்டத்தில் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த மிகப்பெரிய பயிற்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கம், மாணவர்களிடையே விமர்சன சிந்தனையை (தீர்வு காண்) ஊக்குவிப்பதற்காகவும் வளர்ப்பதற்காகவும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதாகும்.
- இது இதே வகையைச் சேர்ந்த ஒரு முதன்மையான முன்முயற்சியாகும். இதில் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றிற்குத் தேசிய அளவில் தரப்படுத்தப்பட்ட பயிற்சி தொகுதிகள் உருவாக்கப் படுகின்றன.

## வெண்ணிலா நடவடிக்கை

- இந்தியக் கடற்படையானது மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (Humanitarian Assistance and Disaster Relief - HADR) நடவடிக்கைகளை ‘வெண்ணிலா நடவடிக்கையின்’ கீழ் மடகாஸ்கரில் மேற்கொள்ள இருக்கின்றது.
- இந்த நடவடிக்கையானது டயான் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மடகாஸ்கரின் மக்களுக்கு உதவுவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்திய கடற்படையைச் சேர்ந்த ஐராவத் கப்பலானது நிவாரணப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது.




## ஒருங்கிணைந்த பிராந்திய மையம் - போர்ட் பிளேர்

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகமானது ஒருங்கிணைந்த பிராந்திய மையத்தைப் (Composite Regional Centre - CRC) போர்ட் பிளேரில் தொடங்கி உள்ளது.
- இந்தியாவில் கோழிக்கோடு, போபால், லக்னோ, பாட்னா, குவஹாத்தி, ஸ்ரீநகர், அகமதாபாத், மண்டி மற்றும் சுராகி (சத்தீஸ்கர்) ஆகிய நகரங்களில் ஒருங்கிணைந்த பிராந்திய மையங்கள் அமைந்துள்ளன.
- பார்வைக் குறைபாடு, மனநலம் குன்றியவர்கள், மதி இறுக்கம் ஆகியவற்றைக் கொண்ட மாற்றுத் திறனாளிகளுக்கு உள்கட்டமைப்பு மற்றும் வளங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்காக CRCகள் தொடங்கப் பட்டுள்ளன.
- இந்த மையங்கள் நகர்ப்புறங்களை விட உள்ளூர் மக்களின் மீது கவனத்தைச் செலுத்துகின்றன.
- இந்த மையங்கள் மத்திய, மாவட்ட மற்றும் மாநில அளவில் புனர்வாழ்வு நிபுணர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பலபடி விரிசல் தொழில்நுட்பம்

- கிழக்கு கடற்கரை ரயில்வேயானது கழிவிலிருந்து ஆற்றலை உற்பத்தி செய்வதற்கான இந்திய ரயில்வேத் துறையின் முதலாவது ஆலையைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் இது போன்று அமைந்துள்ள நான்காவது ஆலை இதுவாகும்.
- இந்த ஆலையானது பலபடி விரிசல் தொழில்நுட்பத்துடன் ரூ. 1.79 கோடி செலவில் அமைக்கப் பட்டுள்ளது.
- பலபடி விரிசல் தொழில்நுட்பத்தில், கழிவுகள் 24 மணி நேரத்தில் பதப்படுத்தப் பட்டு சீர்திருத்தப் படுகின்றன.
- இந்தத் தொழில்நுட்பமானது பலபடி நீக்கம், விரிசல், சீர்திருத்தம், தேய்த்துத் தூய்மைப் படுத்துதல், துகள் வடிகட்டுதல் மற்றும் விரைவாக தணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.
- இந்த முறையில் முன்கூட்டியே பிரித்தெடுத்தலானது தேவையில்லை என்பது இந்த முறையின் முக்கியப் பயன்பாடாகும்.

## புவன் பஞ்சாயத்து 3.0

- ISRO (Indian Space Research Organization - இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு) நிறுவனமானது புவன் பஞ்சாயத்து 3.0 என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், இஸ்ரோ நிறுவனமானது கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் இணைந்து அவர்களின் தரவுத் தேவைகளைப் புரிந்து கொள்ள உதவுகின்றது.
- இந்தத் தளமானது இஸ்ரோவின் செயற்கைக் கோள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் செயல்பட இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது இரண்டு ஆண்டுகளுக்குச் செயல்பட இருக்கின்றது.
- இந்தத் தளமானது மத்தியப் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் கீழ் கிராம மேம்பாட்டுத் திட்டமிடல் செயல்முறைக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ஆந்திரப் பிரதேச சட்டமன்ற மேலவை கலைப்பு

- ஆந்திரப் பிரதேச சட்டமன்றத்தின் கீழ் அவையானது அம்மாநிலத்தின் மேலவையை கலைப்பதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
- ஆந்திர மாநில அரசு இந்தத் தீர்மானத்தை அந்த மாநில ஆளுநரின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்ற ஒப்புதலுக்காக நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
- 1958 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஆந்திரப் பிரதேச சட்டமன்ற மேலவையானது 1985 ஆம் ஆண்டில் கலைக்கப் பட்டது. அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டில் ஆந்திரப் பிரதேச சட்டமன்ற மேலவையானது மீண்டும் ஏற்படுத்தப் பட்டது.
- சரத்து 169ன் படி, சட்ட மேலவை கலைப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டமன்ற கீழவையானது சிறப்புப் பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால், பாராளுமன்றமானது ஒரு சாதாரண பெரும்பான்மை மூலம்

அம்மாநிலத்தின் சட்ட மேலவையை (அது ஏற்கனவே இருந்தால்) கலைக்கலாம் அல்லது அதை (அது இல்லாத சமயத்தில்) உருவாக்கலாம்.

- ஆந்திரப் பிரதேசத்தைத் தவிர, தெலுங்கானா, உத்தரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகியவை சட்டமன்ற மேலவைகளைக் கொண்ட மற்ற மாநிலங்கள் ஆகும்.

### சிவ் போஜன் திட்டம்

- மகாராஷ்டிரா அரசு ‘சிவ் போஜன்’ என்ற ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 71வது குடியரசு தின விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஏழைகளுக்கு வெறும் 10 ரூபாய்க்கு உணவு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்த சோதனைத் திட்டத்தின் கீழ், மாவட்டத் தலைமையகத்தில் குறைந்தது ஒரு ‘சிவ் போஜன்’ உணவகம் என்ற அளவில் அது தொடங்கப் பட்டுள்ளது.
- இத்திட்டமானது அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான உணவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### பத்ம விருதுகள் 2020

- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று பத்ம விருதுகளை வென்றவர்களின் பெயர்களை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- பத்ம விருதுகளானது இந்தியாவில் மிக உயரிய குடிமக்கள் விருதுகளாகக் கருதப் படுகின்றன.
- இந்த விருதுகள் கலை, அறிவியல் & பொறியியல், சமூகப் பணி, விளையாட்டு, குடிமைப் பணி, இலக்கியம் மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளின் ஆளுமைகளுக்கு வழங்கப் படுகின்றன.
- குடியரசு தினக் கொண்டாட்டத்தின் போது முன்னாள் மத்திய அமைச்சரான மனோகர் பாரிக்கர் (இறப்பிற்குப் பின்பு), ஒலிம்பிக் பட்டம் பெற்ற பூப்பந்து வீரர் பி.வி.சிந்து ஆகியோர் பத்ம பூஷண் விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- இந்த விருதுகள் குடியரசு தின விழாவின் போது அறிவிக்கப் படுகின்றன. இந்த விருதுகளை இந்தியக் குடியரசுத் தலைவர் மார்ச் / ஏப்ரல் மாதங்களில் ராஷ்டிரபதி பவனில் வழங்குவார்.
- பத்ம விருதுகள் பின்வரும் மூன்று பிரிவுகளாக வழங்கப் படுகின்றன. அவையாவன:
  - மிகச் சிறந்த மற்றும் சிறப்பான சேவைக்காக "பத்ம விபூஷண்" விருது
  - தனித்துவமான சிறப்பான சேவைக்காக "பத்ம பூஷண்" விருது
  - எந்தவொரு துறையிலும் சிறப்பான சேவையாற்றியதற்காக "பத்மஸ்ரீ" விருது.

| பெயர் | துறை | நாடு/மாநிலம் | விருது |
|---|---|---|---|
| ஜார்ஜ் பெர்னாண்டஸ் (இறப்பிற்குப் பின்பு) | பொது விவகாரங்கள் | பீகார் | பத்ம விபூஷண் |

| | | | |
|---|---|---|---|
| அருண் ஜெட்லி (இறப்பிற்குப் பின்பு) | பொது விவகாரங்கள் | தில்லி | பத்ம விபூஷண் |
| அனிருத் ஜக்நாத் | பொது விவகாரங்கள் | மொரீசியஸ் | பத்ம விபூஷண் |
| M. C. மேரி கோம் | விளையாட்டு | மணிப்பூர் | பத்ம விபூஷண் |
| சன்னுலால் மிஸ்ரா | கலை | உத்தரப் பிரதேசம் | பத்ம விபூஷண் |
| சுஷ்மா சுவராஜ் (இறப்பிற்குப் பின்பு) | பொது விவகாரங்கள் | தில்லி | பத்ம விபூஷண் |
| விஸ்வேச தீர்த்த சுவாமிஜி, பேஜவர அதோக்ஜா மாதா உடுப்பி (இறப்பிற்குப் பின்பு) | மற்றவர்கள் – ஆன்மீகம் | கர்நாடகா | பத்ம விபூஷண் |

| பெயர் | துறை | மாநிலம் | விருது |
|---|---|---|---|
| மனோஜ் தாஸ் | இலக்கியம் மற்றும் கல்வி | புதுச்சேரி | பத்ம பூஷண் |
| கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் | சமூகப் பணி | தமிழ்நாடு | பத்ம பூஷண் |
| வேணு ஸ்ரீனிவாசன் | வர்த்தகம் மற்றும் தொழில் துறை | தமிழ்நாடு | பத்ம பூஷண் |
| லலிதா மற்றும் சரோஜா சிதம்பரம் (இருவருக்கும் சேர்த்து)* | கலை | தமிழ்நாடு | பத்ம ஸ்ரீ |
| மனோகர் தேவதாஸ் | கலை | தமிழ்நாடு | பத்ம ஸ்ரீ |
| S. ராமகிருஷ்ணன் | சமூகப் பணி | தமிழ்நாடு | பத்ம ஸ்ரீ |
| கலி சஹாபி மகபூப் மற்றும் ஷேக் மகபூப் சுபானி (இருவருக்கும் சேர்த்து)* | கலை | தமிழ்நாடு | பத்ம ஸ்ரீ |
| பிரதீப் தலப்பில் | அறிவியல் மற்றும் பொறியியல் | தமிழ்நாடு | பத்ம ஸ்ரீ |
| V. K. முனுசாமி கிருஷ்ணபக்தர் | கலை | புதுச்சேரி | பத்ம ஸ்ரீ |

# முக்கிய தினங்கள்

## தரவுகள் தனியுரிமை தினம் - ஜனவரி 28

- இந்தத் தினமானது ஐரோப்பிய ஒன்றியம் 2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய தரவுகள் பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. இது “ஒப்பந்தம் 108” என அழைக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது தனியுரிமை நடைமுறைகள், ஆபத்தான அல்லது உணர்திறன் வாய்ந்த நபர்கள் மற்றும் தரவு தனியுரிமைக் கொள்கைகள் ஆகியவற்றைப் பரப்புவதற்காக உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.

## லாலா லஜ்பத் ராய் பிறந்த தினம் - ஜனவரி 28

- சுதந்திரப் போராட்ட வீரரான லாலா லஜ்பத் ராயின் 155வது பிறந்த தினத்தை இந்தியா கொண்டாடியது.
- இவரது தேசபக்தி இவருக்கு "பஞ்சாப் கேசரி" மற்றும் "பஞ்சாபின் சிங்கம்" போன்ற பட்டங்களைப் பெற்றுத் தந்தது.
- இவர் 1865 ஆம் ஆண்டு ஜனவரி 28 அன்று பஞ்சாபில் பிறந்தார்.
- லால் பால் பால் ஆகியோர் அடங்கிய மூவர் குழுவில் இவரும் ஒருவராக இருந்தார்.
    - பஞ்சாப்பின் லாலா லஜ்பத் ராய், மகாராஷ்டிராவின் பால கங்காதர திலகர் மற்றும் வங்காளத்தின் பிபின் சந்திர பால் ஆகியோர் இந்த மூவர் குழுவில் இருந்தனர்.
- இவர் இந்து சீர்திருத்த இயக்கங்கள், இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கங்கள், இந்தியத் தேசியவாத இயக்கங்கள் ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்றார்.
- இளைஞர்களான பகத்சிங் மற்றும் சந்திரசேகர் ஆசாத் ஆகியோர் லாலா லஜ்பத் ராயால் பெரிதும் ஈர்க்கப் பட்டனர்.
- 1927 ஆம் ஆண்டில் சைமன் கமிஷனுக்கு எதிரான போராட்டத்தில் இவர் ஒரு முக்கியமானப் பங்கேற்பாளராக விளங்கினார்.
- இவர் ஹிசார் சட்டக் கழகம், ஹிசார் ஆர்ய சமாஜ், ஹிசார் காங்கிரஸ், தேசிய டிஏவி நிர்வாகக் குழு போன்ற பல நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை நிறுவினார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★